**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் –207/2017**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 தங்கவேல் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

1) எனது மைத்துனர் எவ்வளவு இடத்தை கிரையம் வாங்கினார் என்றால் அதுபற்றி தெரியாது. பி.சா.ஆ.1ல் எனக்கு எவ்வளவு நிலம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. பழனியப்பனுக்கு மொத்தம் எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என பி.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், சுமார் 6 ஏக்கர் இருக்கும். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.3 ரசீது தாவா சொத்திற்குரியதா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.2ல் நான் கிரையம் பெற்ற 01.06.2020ம் தேதிக்கு முன்பே 26.01.2000ம் தேதி தீர்வை செலுத்தப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்வை பழனியப்பனுக்காக செலுத்தப்படுவதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிசா.ஆ.3 வது ஆவணம் எந்த பட்டாவிற்காக கொடுக்கப்பட்ட ரசீது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) மேற்படி ஆவணத்தில் 3 வதாக காட்டப்பட்டுள்ள தீர்வை ரசீது சர்வே எண் 302 என கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.3 வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை போகியம் வைத்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.2 பட்டாவை இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு 27.12.2018 அன்று என் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கண்டு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2018ம் வருடம்தான் என் பெயரில் பட்டா வந்துள்ள நிலையில் வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2000ம் வருடத்திலேயே தீர்வை செலுத்தியதாக கண்டுள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 02.04.1991ல் தாவா சொத்தைப் பொறுத்து ராமசாமி மகன் பழனியப்பன் என்பவருக்கு பதிவு செய்து ஈட்டு அடமானம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

3) மேற்படி ஆவணத்தை நான் பதிவு செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. எனது மாமா கிரையம் பெற்ற போது ரூ.5000/- கொடுத்ததாக கிரையம் எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, ரூ.5,00,000/- கொடுத்து வாங்கினேன். எனது கிரைய ஆவணத்தில் ரூ.5,00,000/- கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.1ல் கண்டுள்ள பழனியப்பன் கையெழுத்து அவருடையது அல்ல என்றும், மேற்படி ஆவணம் எங்களால் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது மைத்துனருக்கு ரூ.5000/- கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்றும், தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எப்போதும் அனுபவத்தில் இல்லை என்றும், வாதி வெளியூரில் இருப்பதை பயன்படுத்திக் கொண்டு என் பெயரில் ஆவணங்களை பொய்யாக ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) 1ம் பிரதிவாதி ராஜலிங்கம் எனது அண்ணன், அவர் இறந்துவிட்டார். 8 முதல் 10 பிரதிவாதிகள் அவரது வாரிசுகள் என்றால் சரிதான். எனது அண்ணன் ராஜலிங்கம் மற்றும் பிரதிவாதிகள் பெயரில் ஏதாவது ஆவணத்தை பழனியப்பன் எழுதிக் கொடுத்துள்ளரா என்றால், ராஜலிங்கம் பெயரில் எழுதிக் கொடுத்துள்ளார். எவ்வளவு நிலத்தை எந்த தேதியில் எழுதிக் கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தாவா சொத்தை அபகரிக்க வேண்டி நாங்களாக தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**